| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| சா.சேதுராம வர்மா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி<br>அலுவலர்கள் மற்றும்<br>இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி. |

ந.க.எண்.012434 /எப்.1/2022 நாள் : 27.06.2022

ஐயா/ அம்மையீர்,

**பொருள் :** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத் தேர்வு, ஆகஸ்ட் 2022 – பள்ளி மாணவர்கள் பள்ளிகள் மூலமும் / தனித்தேர்வர்கள் சேவை மையங்கள் (Service Centres) மூலமும் ஆன்–லைனில் விண்ணப்பித்தல் – பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுரை வழங்கக் கோருதல் – தொடர்பாக.

**பார்வை :** இவ்வலுவலக இதே எண்ணிட்ட செய்திக்குறிப்பு, நாள். 27.06.2022

******

நடைபெறவிருக்கும் ஆகஸ்ட் 2022, மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத் தேர்வெழுத ஆன்–லைன் வழியாக விண்ணப்பிப்பதற்கு **29.06.2022 (புதன் கிழமை) முதல் 06.07.2022 (புதன் கிழமை)** வரையிலான நாட்களில் (03.07.2022 ஞாயிற்றுக் கிழமை நீங்கலாக) காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள் பள்ளி மாணவர்கள் தாங்கள் பயிலும் பள்ளியிலும் / தனித் தேர்வர்கள் சேவை மையங்களுக்கும் நேரில் சென்று விண்ணப்பிக்க வேண்டும் எனவும், மேற்குறிப்பிட்ட தேதிகளில் விண்ணப்பிக்கத் தவறும் தேர்வர்கள், சிறப்பு அனுமதித் திட்டத்தில் **07.07.2022 (வியாழக் கிழமை) முதல் 09.07.2022 (சனிக் கிழமை)** வரையிலான நாட்களில் விண்ணப்பிக்க வேண்டும் என பார்வையில் காணும் செய்திக்குறிப்பின் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 2022, மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத் தேர்வெழுத விண்ணப்பிக்கும் தேர்வர்களின் விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவேற்றம் செய்வது தொடர்பான சேவை மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுரைகள் மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத்தேர்வெழுத விண்ணப்பிக்கும் தனித்தேர்வர்களுக்கான அறிவுரைகள் ஆகியவை இக்கடிதத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகளுக்கும் / தனித்தேர்வர்கள் சேவை மையங்களுக்கும் **29.06.2022 முதல்** வருகைபுரிவார்கள். அவ்வாறு வருகை புரிவோருக்கு கீழ்க்கண்டவாறு ஆன்–லைன் மூலம் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்ய தங்களது ஆளுகைக்குட்பட்ட பள்ளிகள் / சேவை மையங்களின் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. **29.06.2022 காலை 10.00 மணி** முதல் பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிக்கும் / தனித்தேர்வர்கள் சேவை மையங்களுக்கும் வருகைபுரிவார்கள். அவ்வாறு வருகைபுரிவோரிடம் அவர்கள் மே 2022 மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வின் நுழைவுச் சீட்டு (Hall Ticket) அல்லது மதிப்பெண் பட்டியலினை (Statement of Marks) ஆய்வு செய்து www.dge.tn.gov.in என்ற website–ல் பள்ளிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட User ID மற்றும் Password–ஐ பயன்படுத்தி, தேர்வர்களின் விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

1. www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று, Click here to access Online Portal for School and Educational Offices என்ற வாசகத்தினை click செய்த பின்னர் திரையில் தோன்றும் HSE FIRST YEAR SUPPLEMENTARY EXAM – PRIVATE APPLICATION என்ற தலைப்பின் கீழ் இடம் பெற்றிருக்கும் மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத் தேர்வுகளுக்கான விண்ணப்பங்களைப் பெறுதல் தொடர்பாக சேவை மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுரைகள், மேல்நிலை முதலாம் ஆண்டு தனித் தேர்வர்களுக்கான அறிவுரைகள் மற்றும் +1 பழைய பாடத் திட்டத்திற்கு இணையாக புதிய பாடத்திட்டத்தில் உள்ள பாடங்கள் (+1 Equivalent Subjects) தொடர்பான பட்டியல் ஆகியவற்றைப் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

2. மேல்நிலை முதலாமாண்டு தனித்தேர்வர்களுக்கான அறிவுரைகள் மற்றும் அதன் இணைப்புப் பட்டியல் ஆகியவற்றை சேவை மையங்களின் அறிவிப்பு பலகையில் ஒட்டவேண்டும்.

3. ஆகஸ்ட் 2022 துணைத் தேர்வுகளுக்கான விண்ணப்பங்களை பெறுவதற்கு கடைசி நாளான 06.07.2022 / 09.07.2022 ஆகிய நாட்களில் அனைத்து விண்ணப்பங்களையும் பெற்று பதிவேற்றம் (Uploading) செய்த பின்னர், Report Section – Multiple report –ஐ Click செய்து தேர்வர் வகை வாரியான விவரங்களையும், கட்டணம் தொடர்பான விவரங்களையும் பதிவிறக்கம் (Downloading) செய்ய வேண்டும்.

4. பின்னர் அதனடிப்படையில் விண்ணப்பிக்க வருகைபுரிந்த மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட தொகையினை, தேர்வு விண்ணப்பத் தொகை (தக்கல் கட்டணம் உட்பட) (Exam Fees + Others Fees) எனவும், அரசாணை(ப) எண்.780, பள்ளிக் கல்வி(ஜிஇ1)த் துறை, நாள்.28.12.2017–ன்படி, பெறப்பட்ட ஆன்–லைன் கட்டணத் தொகை (On–line Fees) எனவும் தனித்தனியாக பிரித்து, அதனை www.karuvoolam.tn.gov.in இணையதளத்திற்கு சென்று இணைப்பில் காணும் வழிமுறைகளை பின்பற்றி கீழ்க்காண் கணக்கு தலைப்பு மற்றும் துறை விவரங்களை பயன்படுத்தி தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்–லைன் கட்டணத்தினை செலுத்திட வேண்டும்.

| | |
|---|---|
| District | PAO (South) Chennai |
| Department receiving receipts | 04304 Directorate of Government Examinations |
| DDO Name | 41010118 Accounts Officer |
| கணக்குத் தலைப்பு | 0202 01 102 AA 22713–Examination Fees<br>0202 01 102 AA 22799– Others |

5. மேற்கண்டவாறு தேர்வர்களின் தேர்வுக் கட்டண தொகை மற்றும் ஆன்–லைன் கட்டணத்தொகையினை செலுத்திய பிறகு பெறப்படும் Payment Receipt மற்றும் தேர்விற்கு விண்ணப்பித்த மாணவர்களின் விண்ணப்பங்கள் (உரிய இணைப்புகளுடன்) ஆகியவற்றினை 11.07.2022–க்குள் சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரிடம் நேரில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அனைத்து உதவி இயக்குநர்களும் Payment Receipt மற்றும் விண்ணப்பங்களை ஒப்பிட்டு அதன் அறிக்கையினை 11.07.2022–க்குள் துணை இயக்குநர் பொது அவர்களின் பெயரிட்ட முகவரிக்கு பதிவஞ்சலில் அனுப்பி வைத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**<u>பொதுவான அறிவுரைகள்:–</u>**

1. **தேர்வர்கள் துணைத் தேர்வுக்கு விண்ணப்பிக்க தாங்கள் பயின்ற பள்ளிகள் / சேவை மையங்களுக்கு வரும் பொழுது கட்டாயம் முகக்கவசம் அணிந்து வரவேண்டும்.**
2. **போதிய சமூக இடைவெளி கடைப்பிடிக்க வேண்டும்.**

**இணைப்பு**

1. செய்தி குறிப்பு
2. தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்–லைன் கட்டணங்கள் செலுத்தும் வழிமுறைகள்
3. மேல்நிலை முதலாம் ஆண்டு தனித்தேர்வர்களுக்கான அறிவுரைகள்
4. மேல்நிலை முதலாம் ஆண்டு சேவை மையங்களுக்கான அறிவுரைகள்
5. +1 பழைய பாடத் திட்டத்திற்கு இணையான
   புதிய பாடத்திட்டத்திற்கான பாடங்கள்

**ஒம்/–**
**இயக்குநர்**

**<u>நகல்</u>**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் – தகவலுக்காக
2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் –
   (தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும்)